

# Euphrasia of Constantinople

# புனித யுப்ராசியா (380-420)

இவள் தன் பெற்றோருக்கு ஒரே மகள். மகள் பிறந்த பின் பெற்றோர்கள் விரத்தராக வாழ விரும்பினர். தாய் தன் மகளுடன் எகிப்து நாட்டுக்குச் சென்றாள். அங்கு கன்னியரின் மடத்தினருகில் வாழ்ந்தனர். கன்னியர் கடுந்தவ வாழ்வு நடத்தினர். ஏழு வயது ஆனதும் நம் புனிதை கன்னியம் மடத்தில் சேர ஆடைப்பட்டாள். தாயோ பெரும் பரித்தியாகம் செய்து மகளை மடத்தின் தலைவியிடம் ஒப்படைத்தாள். சாகுமுன் அவள் தன் மகளை நோக்கி “மகளே நீ அரச குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பதை மறந்து விடு. தாழ்ச்சியுடன் கடவுளுக்கு சேவை செய்து வா” என்றாள். அவளது மரணத்தைப் பற்றி கேள்விப்பட்ட தெயதோசியு பேரரசர் நம் புனிதையை தம்மிடம் அழைத்து, ஒரு வாலிப பிரபுக்கு அவளை மணமுடித்துக் கொடுப்பதற்காக அவர் வாக்களித்திருந்தார். யுப்ராசியா தன் கைப்பட அரசருக்கு ஒரு கடிதம் எழுதி “மணமுடிக்க நான் விரும்பவில்லை. எனது உடைமைகளை எல்லாம் ஏழைகளுக்கும் அகதிகளுக்கும் கோயில்களுக்கும் சுதந்திரம் கொடுங்கள் அடிமைகள் அனைவருக்கும் கொடுத்து விடுங்கள்” என்னும் பொருள்பட உருக்கமாக எழுதியிருந்தாள். கடிதத்தைப் படித்த பேரரசர் கண்ணீர் வடித்தார். பேரரசர் சாகுமுன் அவளது விருப்பங்களை நிறைவேற்றினார்.

**சிந்தனை:**

பிள்ளைகள் உலகத்தைத் துறக்க விரும்பினால் பெற்றோர் பெரும் பரித்தியாகங்கள் செய்தும் அவளுக்கு அனுமதி அளிக்க வேண்டும்.

**செபம்:**

பிதாவுக்குக் கீழ்ப்படிந்து தேவாலயத்தில் தங்கிய இயேசுவே, பெற்றோரைவிட உம்மை நாங்கள் அதிகமாய் நேசிக்கும் வரம் தாரும்.